DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.5/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 20th day of August 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 3** | கிராமம் | : | ஆலங்குளம் |
| பெயர் | : | பாலகங்காரதன் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/ பெ. | : | சேதுக்கரசு | சமயம் | : | இந்து |
| வயது | : | 50 | ஜாதி | : | தேவேந்திரகுலவேளாளர் |
| தொழில் | : | கூலி வேலை | | | |

<u>நாள்:</u> <u>20.08.2024</u>
<u>நேரம்:</u> 03.50

2 ம் எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் 317 கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதி வழங்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். எதிரிகள் இருவரையும் தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். 11.10.2022 ம் தேதி காலை 08.00 மணியளவில் நான் வெளியில் சென்றுவிட்டு ரோட்டில் வரும் போது பைக்கில் எதிரிகள் இருவரும் வந்தார்கள். அப்போது அ.சா.1 ஐ இருவரும் திட்டிக்கொண்டிருந்தார்கள். நான் அப்போது பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்போது விமல் என்பவர் வண்டியில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். முகேஷ் என்பவர் இரண்டு, மூன்று தடவை அ.சா.1 டம சண்டை போட்டுக்கொண்டிருந்தார். நான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். நான் போனை கீழே வைத்துவிட்டு வருவதற்குள் 2 ம் எதிரி அ.சா.1 ஐ அடித்துவிட்டார். அதன் பிறகு போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

தற்போது முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். அ.சா1 ன் மீது 1ம் எதிரி புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம். அ,சா.1 2011 முதல் 2016 வரையிலும் எங்கள் ஊரில் ஊராட்சி மன்ற தலைவர் என்றால் சரிதான். அ.சா.1 விட்டில் இருந்து எத்தனை வீடுகள் தள்ளி எனது வீடு உள்ளது என்றால் 2,3 தெருக்கள் தள்ளி உள்ளது. அ.சா.1 வீடானது நல்லிருக்கை சாலையில் ஒட்டி உள்ளது என்றால் சரிதான். அந்த ஊர் கம்மாக்கரையில் இருந்து வரும் போது அ.சா.1 ன் வீடு முதல் வீடு என்றால் சரிதான். அ.சா.1 ன் தம்பி தான் முன்னால் சோலவந்தான் எம்.எல்.ஏ மாணிக்கம் என்றால் சரிதான். எனது ஊரின் முகப்பில் பெரிய கருங்கால் உடைய ஐய்யனார் கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவில் எல்லாருக்கும் பாத்தியப்பட்ட கோவில் என்று சொன்னால் சரிதான். எனது இனத்தை சேர்ந்தவர்களுக்கு தனியாக கோவில் உள்ளது என்றால் சரிதான். கருப்பையா கோவில் அல்லது தூவல் கோவில் என்று உள்ளது என்றால் சரிதான். முனியப்ப சாமி கோவில் என்று உள்ளது என்றால் சரிதான். வளவந்தான் அம்மன் கோவில் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டதாகத்தான் அ.சா.1 என்னிடம் சொன்னார் என்றால் இல்லை. 11.10.2022 ம் தேதி என்னுடன் சேர்ந்து யார் யார் வந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை. சம்பவத்தன்று 2ம் எதிரி மருத்துவமனைக்கு சென்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. யாதவர் சமூதாய தெரு பொதுஇடம் என்றால் சரியல்ல. பொது இடம் என்று அங்கு எதுவும் இல்லை. பஸ் நிறுத்தம் உள்ளது. பஸ் நிறுத்தம் உள்ள இடமானது பொது இடம் என்று சொன்னால் சரியல்ல. அந்த பொது இடத்தில்தான் இ.சேவை மையம், நூலக கட்டிடம் மற்றும் பயன்படுத்துவதற்கு பொதுவான இடம் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பிறகும் எதிரிகள் அ.சா.1 ன் மீதும் அ.சா.1 எதிரிகள் மீதும் புகார் கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் யார் மீதாவது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 26.06.2022 ம் தேதி ஆலங்குளம் கிராமத்தில் 10 இளஞர்கள் மீது புகார் அளித்து தற்போது வரை சி.எஸ்.ஆர் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் என்னை இதுவரையிலும் விசாரிக்கவில்லை. எங்கள் கிராமத்து இளைஞர்களை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். அன்றைய தேதியில் ராஜவள்ளி, கனகவள்ளி, கனிப்பாண்டி ஆகியோர்கள் கிராமத்தை சேர்ந்த நபர்கள் மீதும் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு கிராமத்தில் இருந்து சென்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதன் பிறகு காளீஸ்வரன் செல்லகருங்கு என்பவர் மீது புகார்

கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. செல்லகருங்கு காளிஸ்வரன் மீது புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதே காவல் நிலையத்தில் முனிபிரகாஷ் என்பவர் 1ம் எதிராக புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் கிராமத்தில் இரண்டு பிரிவுகளாக இருந்து நாங்கள் ஒரு கோவிலும் எதிரி தரப்பினர் மற்றோரு கோவிலிலும் வழிபாடு நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். இரண்டு பிரிவுகளாக சேர்ந்து வழிபாடு நடத்தி வந்தததால்தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. இரண்டு பிரிவுகளும் தனித்தனியாகத்தான் வரி வசூல் செய்து வழிபாடு நடத்தி வருகிறார்கள் என்றால் வரி வசூல் செய்கிறார்கள் ஆனால் எங்களை வழிபாடு செய்ய விடுவதில்லை. வாழவந்தான் அம்மன் கோவில் முளைப்பாரி திருவிழா சம்மந்தமாக எங்கள் ஊரில் கூட்டம் போட்டு பேசினார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. முளைப்பாரி முடிந்த பிறகு கூட்டம் போட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முளைப்பாரி முடிந்த பிறகு ஒரு கூட்டம் நடைபெற்றது என்றாலும் அதில் வரவு செலவு கணக்குகள் பார்க்கப்பட்டது என்றாலும் அந்த வரவு செலவு கணக்குகளில் அ.சா.1 முறையாடல் செய்திருந்தார் என்றாலும் அந்த வரவு செலவு கணக்குகளை கேட்டதால்தான் அ.சா.1 எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதற்கு ஆதரவாக என்னை சாட்சியம் அளிக்க அ.சா.1 அழைத்து வந்துள்ளார் என்றாலும் சரியல்ல. சம்பவ தேதியான 11.10.2022 ம் தேதியன்று நான் அ.சா.1 வீட்டு பக்கம் செல்லவில்லை என்றாலும் அங்கு எவ்வித பிரச்சனையும் நடைபெறவில்லை என்றாலும் நான் எந்த பிரச்சனையும் பார்க்கவில்லை என்று சொன்னாலும் பின்பு அ.சா.1 ன் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் அ.சா.1 வீட்டிற்கு நான் செல்லவில்லை என்றாலும் செல்வதற்கு வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.08.20 18:06:14 +0530